தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, பங்குனி 6, திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 மார்ச் 20, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு."

எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி, தேவையானதைக் கொடுத்து, உதவி செய்யும் ஆட்சியாளருக்குப் புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல் குடிமக்களும் அமைவார்கள்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

51—

பனை மரங்களைப் பாதுகாத்தல்

***9814—திரு. கே.ஏ. பாண்டியன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், பிச்சாவரம் மற்றும் சாமியார்பேட்டை ஆகிய கிராமங்களில் உள்ள பனை மரங்களைப் பாதுகாக்கவும் மற்றும் நடவு திட்டத்தைச் செயல்படுத்தவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 மார்ச் 20

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதியில் உள்ள பிச்சாவரம் மற்றும் சாமியார்பேட்டை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கிள்ளை காப்புக் காடு 1,413.98 ஹெக்டர் பரப்பளவுக் கொண்டது. இப்பகுதி தமிழ்நாட்டின் கடற்கரை எல்லையோரப் பகுதியில் அமைந்துள்ளதால், கடற்கரையில் ஏற்படும் மண் அரிப்பு மற்றும் காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு, 2016–2017 ஆம் ஆண்டில் ரூ.94,000/– மதிப்பீட்டில் 7,500 இளம் பனை நாற்றுகளும், 2017–2018 ஆம் ஆண்டில் ரூ.1,40,000/– மதிப்பீட்டில் 11,500 இளம் பனை நாற்றுகளும் நடப்பட்டு, பனை மரங்கள் பாதுகாத்தல் மற்றும் நடவுத் திட்டம் செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.

திரு. கே.ஏ. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற எளியவனுக்கும் இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த வங்கக் கடலோரம் 6 அடி சந்தனப் பேழையில் உறங்கியும், உறங்காமலும் விழித்திருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

துப்பாக்கிக் குண்டுகளுக்குக்கூட தன் தொண்டையிலே இடமளித்து, இல்லை என்று சொல்லி வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கிய, (மேசையைத் தட்டும் ஒலி) கடையெழு வள்ளல்களைத் தொடர்ந்து எட்டாவது வள்ளலாக விளங்கும் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும் உருவாக்கிய இந்த இயக்கத்தை கண் இமைபோல் கட்டிக் காத்து வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தொகுதியில், பிச்சாவரம், சாமியார்பேட்டை, கிள்ளை போன்ற 20–க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. 2004 ஆம் ஆண்டு ‘சுனாமி பேரலையும்’, 2011

2018 மார்ச் 20]

ஆம் ஆண்டு 'தானே' புயலும், 2014 ஆம் ஆண்டு 'நீலம்' புயலும் என அடிக்கடி ஏற்படுகின்ற இயற்கைச் சீற்றங்களால் இந்தப் பகுதிகள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன. எனவே, எதிர்வரும் காலங்களில் இயற்கைப் பேரிடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டும், சுமார் 20 கிலோ மீட்டர் கடல் பகுதி உள்ளதாலும், இந்தப் பகுதிகளில் 10,000–க்கும் மேற்பட்ட பனை விதைகள் நடுவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, அரசு இதற்கு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படகுகள் குழாம் அமைக்க வேண்டும் என்றும், அரசுக்கு இதனால் வருவாய் வருவதாகவும் தெரிவித்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ளதுபோல், படகுகள் குழாம் அமைக்கும்போது சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகிறதா, பிச்சாவரம் பகுதியில் வாழும் நண்டுகள், பல்வேறு வகையான மீன்கள், அங்கே வாழும் பல்வேறு பறவைகள் ஆகியவற்றிற்குப் பாதிப்பு ஏற்படுகிறதா என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டியிருக்கிறது. சுற்றுச்சூழல் சீர்கேடு ஏற்படுகிறது என்பதாலும், வருவாயை மட்டுமே கணக்கில் கொள்ளாது, சூழலையும் கணக்கில்கொள்ள வேண்டும் என்பதாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, துறை அதிகாரிகளோடு கலந்து, அதற்குரிய சூழ்நிலை உருவாகுமானால் அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.*

திரு. கே.ஏ. பாண்டியன்: *நல்ல பதிலைத் தந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சீமை கருவேல முள் மரத்தைப் பற்றி கேள்வி எழுப்பியுள்ளேன். மண்ணை மலடாக்கும் பயங்கரத்தைச் செய்யும் மரம் இந்தச் சீமை கருவேல மரம். நமக்கும் மண்ணுக்கும் பயன் ஏதும் தராமல் கேடு மட்டுமே விளைவிக்கும் மரமாகும். 1950–களில் விறகிற்காகவும், கரிக்கட்டைக்காகவும் வளர்க்கப்பட்டது. இது நிலத்தடி நீரை உறிஞ்சும். நிலத்தில் நீர் இல்லையென்றால் காற்றில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி அந்த பகுதியையே வெப்பமயமாக்கும். இதைவிட கொடுமை, சீமை கருவேல முள் மரத்தின் வேர் நிலத்தடி நீரைத் தொட்டவுடனே நீர் முழுவதும் விஷமாகிவிடும் என்கின்ற அதிர்ச்சி செய்தியை ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். 4 லிட்டர் தண்ணீரை உறிஞ்சி 1 கிலோ மரம் வருகிறது. அதுவும் எதற்கும் பயனற்றப் பொருளாக இருக்கிறது. பொதுவாக எல்லா மரங்களும் பகலில் Oxygen–ஐயும், இரவில் Carbon dioxide–ஐயும் வெளிவிடுகின்றன. சீமை கருவேல மரம் Carbon dioxide–ஐ மட்டும்தான் வெளிவிடும். பேராபத்தை விளைவிக்கப் போகும் இந்த மரங்கள் தமிழ்நாடு முழுவதும் மண்டிக் கிடக்கின்றன. மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் அதிகமாகக் காணப்படுகிறது. இதை அடியோடு அழிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது, எடுக்கப் போகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள் குறிப்பிட்ட அத்தனை செய்திகளும் உண்மையானவை. இதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி அனைவருக்கும் பொதுவான ஒன்றுதான். Supreme Court–ன் வழிகாட்டுதலின்படி, அவற்றைக் களைவதற்குரிய சிறப்பான நடவடிக்கைகள் வனத் துறை மூலமாக எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், பஞ்சாயத்து யூனியன் மற்றும் பஞ்சாயத்துகளிலுள்ள B.D.O.–கள், அதிகாரிகள் ஆகியோரிடம்

2018 மார்ச் 20]

எங்கெல்லாம் அவை களையப்பட வேண்டும் என்பதற்குரிய கருத்துருக்களை அனுப்பச் சொல்லி, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் முழுவதும் வெப்பம் அதிகரித்து வருகின்ற காரணத்தால் இன்றைக்கு சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, மழையினுடைய அளவு குறைந்து வருகிறது. இந்தியாவை பொறுத்தளவில் வனத்தின் பரப்பளவு 33%. ஆனால், தமிழ்நாட்டிலே வனத்தின் பரப்பளவு 17% தான். எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, தமிழகத்தில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியச் சாலைகள், நெடுஞ்சாலைத் துறைக்குட்பட்ட மாவட்ட இதரச் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள், அதுமட்டுமல்லாமல் 4 வழி சாலை, 6 வழி சாலை, அரசு புறம்போக்கு நிலங்கள் என அனைத்திலும் சிறப்பு நிகழ்வாக மரம் வளர்க்கின்ற திட்டத்தை இந்த அரசு கொண்டு வரவேண்டும். மேலும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். திருப்பூரிலிருந்து திண்டுக்கல்லுக்கு வந்து, திண்டுக்கல்லில் மரம் நடுகின்ற நிகழ்ச்சிக்காக, மாவட்ட ஆட்சித் தலைவர், அங்குள்ள தொழிலதிபர்கள் எல்லாம் முன்வந்து மரங்களை நட்டுக் கொண்டிருக்கின்றனர். இதேபோல், மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைத்து, நகராட்சியின் மூலமாக ஒவ்வொரு ஒன்றியமாக சாலைகளைப் பிரித்துக் கொடுத்து, 3 ஆண்டுகளுக்கு அந்த மரங்களை வளர்க்க வேண்டுமென்று ஒரு முடிவு எடுத்து, அப்படிப்பட்ட நிகழ்வுகளை நடத்தினால் தமிழ்நாட்டில் வனத்தின் பரப்பளவு அதிகரிக்கும். மழையின் அளவும் அதிகரிக்கும். எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களோடும் கலந்து பேசி, மாநில அளவிலே ஒரு குழு, அதேபோல மாவட்ட அளவிலே ஒரு குழு அமைத்து தமிழகம் முழுவதும் மரம் நடுகின்ற திட்டத்தைத் தொடங்குவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள் சொல்லிய கருத்துகள் நல்ல கருத்துகள்தான்.* Forest Survey of India, Dehradun–ல் *இருக்கிறது. அங்கிருந்து தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் எப்படி வெப்பமாகிறது என்கின்ற செய்தி கருவிகளின் மூலமாகக் கண்டறியப்பட்டு எல்லோருக்கும்* alert *செய்யப்படுகிறது. இங்கே மழை இல்லை, இங்கே வெப்பம் அதிகமாக இருக்கிறது, இங்கே தீ பிடித்தல் போன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன என்கிற செய்திகளை வனத் துறைக்கு மட்டுமல்ல, தொடர்புள்ள பல்வேறு அமைப்புகளுக்கும், நபர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. வனத் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு இணைந்து, அந்தக் கருத்துகளைப் பரிமாறி, நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இது ஒன்று.*

இரண்டாவது, மரம் வளர்க்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் இங்கே சொன்னார்கள். உங்களுக்குத் தெரியும். நாங்கள் இதய தெய்வமாக வணங்குகின்ற, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பிறந்த நாளை, வருடா வருடம் கொண்டாடி வருகிறோம். இந்த வருடம் 70 இலட்சம் மரக் கன்றுகளை நடுவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் பணிகள் நடைபெற்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய பிறந்த நாளான, சென்ற மாதம் 24 ஆம் தேதி மாண்புமிகு பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தலைமையில் மரம் நடும் விழா தொடங்கப்பட்டு, தற்போது தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. குழுக்கள் அமைப்பது தொடர்பாக நீங்கள் சொல்லிய நல்ல கருத்து குறித்து செய்ய வேண்டிய பணிகளை நாங்கள் வனத் துறையின் மூலமாக மேற்கொள்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவது கருத்து. திருப்பூரிலிருந்து திண்டுக்கல்லுக்கு வந்து மரம் நடுவதாகச் சொல்லியிருக்கிறார். திருப்பூரில், "திருப்பூர்

2018 மார்ச் 20]

மா வனம்'' என்கிற திட்டம் மிகச் சிறப்பான முறையிலே வனத் துறையின் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைப்போல, "திண்டி மா வனம்'' என்கின்ற திட்டத்தை மிகச் சிறப்பான முறையிலே அங்கேயிருக்கின்ற தொழிலதிபர்கள், நல்ல உள்ளங்கள் படைத்தவர்களோடு சேர்ந்து, அருமையான மரம் வளர்ப்பு மன்றம் ஒன்று கோடையில் ஆரம்பிக்கப்பட்டு, கொடுக்கப்பட்ட நன்கொடைமூலம் தண்ணீர்ப் பிரச்சினை மற்றும் பிற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு, இப்போது அழகான மரங்கள் வளர்ந்திருக்கின்றன. திருப்பூர் மக்கள் யோசனை சொன்னார்கள். பொருள் உதவியை திண்டிவன மக்கள்தான் ஏற்றுக்கொண்டோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை சபைக்குக் கொடுக்க வேண்டாமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடமும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமும் கலந்து பேசி, அவர்கள் கேட்டிருக்கின்ற மரம் வளர்ப்பது பற்றி இன்னும் அதிகமாகச் செய்வோம். தேசிய நெடுஞ்சாலை என்றைக்கு வந்ததோ, அன்றைக்கே அத்தனை மரங்களும் பட்டுப் போய், எந்த ஊரிலே, காரிலே போகின்றோம் என்றுகூட அடையாளம் தெரியாத அளவிற்கு உள்ளதால் மரங்கள் எடுத்த இடங்களில் மறுபடியும் மரங்கள் நடப்படும். ஒரு பக்கம் சாலை நன்றாக இருக்கின்றது. இன்னொரு பக்கம் நிழல் இல்லை. இருந்தாலும், அவருடைய கருத்துகள் ஆராயப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

நியாய விலைக் கடை

***14210—டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*